மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் பிரம்மாண்டமான விற்பனை நிலையங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தீர்மானம் போட்டு, தங்கள் கழகத்தைச் சேர்ந்தவர்களையும், கட்சியைச் சேர்ந்தவர்களையும், 'எங்கள் குடும்பத்திலே உள்ள அனைவரும், கோ-ஆப்டெக்ஸில் மட்டுமே, எங்களுக்குத் தேவையான அனைத்து ரகங்களையும் வாங்குவோம்' என்று ஓர் உறுதியை எடுத்துக்கொள்ளச் செய்தால் இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு, இவர்களைப் பின்பற்றி மற்ற பொது மக்களும் முன்வருவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

54—

விளையாட்டு மைதானம்

***53582—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையிலுள்ள விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சு. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்று தினம் தினம் திட்டம் தந்து, தமிழகத்தை முன்னோடி மாநிலமாக ஆக்கிக் கொண்டிருக்கின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த அரசு, ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையிலுள்ள விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்க ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.

திருமதி மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான்; மக்களுக்காக நான்' என்று வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நாளை பிறந்த நாள். தமிழகத்தின் விடிவெள்ளி, மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்த வயதில்லை என்றாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இந்த விளையாட்டு மைதானம் 2001-ல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் தொடங்கப்பட்டது. மீண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதைச் சீரமைத்துக் கொடுக்க முன்வந்த, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

55—

சமுதாயக் கூடம்

***26848—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலஉரப்பனூர், இந்திரா காலனி, சுங்குராம்பட்டி ஆகிய கிராமங்களில் தாட்கோ மூலமாக சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?